

# விலாசம்

# විලාසම

# Vilasam





# மணம் பார்க்க வந்து வீடு மாறியது

செல்வன் பச்சியம்மாள்



நாற்பத்திரண்டு வருடங்கள் தொழிலாளியாகி இத் தோட்டத்தில் சேவை செய்துள்ளேன். இதுவரை காலம் கடிதமொன்று பெறவில்லை. மணம் பார்க்க வந்தவர்கள் முகவரி இன்மையால் வீடு மாறி சென்றிருந்தனர். நண்பர்களும், உறவினர்களும் கூட வீடு மாறிச் சென்ற சந்தர்ப்பங்கள் உண்டு. முகவரி கிடைத்து மகிழ்ச்சிக்குரியது.



# மரியாதை கிடைத்துள்ளது

ந. லலிதா

முன்பள்ளி ஆசிரியை

நான் முன்பள்ளி ஆசிரியராக கடமையாற்றுகின்றேன். நவீன சமூக அபிவிருத்திப் பாதையில் சென்ற வண்ணமுள்ளது. இனும் எமது சமூகத்தினருக்கு முகவரியொன்றை பெற்றுக்கொள்ளுதல் எட்டாக் கனியாகவுள்ளது. இன்று எமக்கு முகவரி கிடைக்கப் பெற்றதால் நாட்டில் கௌரவமாக வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கும் தோட்ட முகாமைத்துவத்திற்கும்


"விலாசம்" என்பது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் வெளியீடாகும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக அரசாங்கம், முரண்பாடுகளைத் தீர்த்தல் அதனுடன் இணைந்த முரண்பாடுகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும் 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்களின் கொள்கை விமர்சன ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

"விலாசம்" பிரசுரம், இலங்கையில் மோதல்களைத் தீர்ப்பதற்கு ஏற்புடைய பிரச்சினைகளைப் பற்றி, எமது சமாதானம் மற்றும் மோதல் பகுப்பாய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் பொது மக்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தும் ஒரு மார்க்கமாகும். இவ்வெளியீட்டின் கருத்துக்கள் கட்டாயமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதோ அல்லது அதன் பணிப்பாளர் சபையினதோ கருத்துக்களை பிரதிபலிக்கமாட்டாது.



மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க.

பதிப்பாசிரியர் "விலாசம்"
மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், 6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு -5, இலங்கை
தொலைபேசி: 94-11-2081384/06 / பக்ஸ் : 94-11-4714460 மின்னஞ்சல்: cpa@cpalanka.org ,ணையதளம்: www.cpalanka.org




# விலாசம்
# විලාසම

தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு
நிரந்தர முகவரி வழங்கும் சமூக செயற்பாடு

2016 மார்ச் 05

மொகா தோட்டம்
மஸ்கெலிய

மொழிபெயர்ப்பு : **ஜே. சுரேஷ்குமார்**

புகைப்படம் : **எம். பிரதீபன்**

பக்க வடிவமைப்பு : **வாக்யா றூ** தொ.பே: 011-2708377

அச்சுப் பதிப்பு : **க்ளோப் பிரின்டிங் வர்க்ஸ்** தொ.பே : 0777-315971







## முகவரி அற்ற தோட்ட தொழிலாளர்களுக்கு

# நிரந்தர முகவரி

முகவரி அற்ற பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நிரந்தர முகவரி வழங்கும் செயற்பாடு முதல் முறையாக 2013 ஆம் ஆண்டு பதுளை மாவட்டத்தில் இடம்பெற்றது.

இச் செயற்பாட்டின் இரண்டாம் கட்டத்திற்காக அம்பகமுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட "மொகா தோட்டம்" தேர்வு செய்யப்பட்டது. இச் செயற்பாடானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலையீட்டுடன் மொகா தோட்ட பிரஜைகள் சபை ஒன்றியம் மற்றும் மொகா தோட்ட முகாமைத்துவம் மற்றும் வேல்ட் விஸன் போன்றவற்றின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்செயற்பாட்டின் மூலம் போது 1500 க்கு அதிகமான பொது மக்கள் பயன் அடைகின்றனர். பரீட்சார்த்த கருத்திட்டமாக இருந்தாலும் முகவரி வழங்கும் கருத்திட்டம் இரண்டாவது முறையும் வெற்றியடைந்தது. அகில இலங்கைரீதியாக செயற்படுத்த வேண்டிய முன்மாதிரியான செயற்பாடாக அமைந்திருக்கின்றது.

அம்பகமுவ பிரதேச சபை, அம்பகமுவ பிரதேச செயலகம், மொகா தோட்ட முகாமைத்துவம்,மொகா கிராம உத்தியோகத்தர் மற்றும் மஸ்கெலிய பொலிஸ் நிலையம் உட்பட பல நிறுவனங்கள் இதற்கு பங்காளர்களாக செயற்பட்டனர்.

தோட்ட தொழிலாளர்களுக்கு நிரந்தரமான முகவரிகளை உறுதிப்படுத்தல் மேற்படி முகவரிகளுக்கு உரிய சாதாரண தபால் முறையின் கீழ் இக்கடிதங்களை பெறுவதற்கு வகை செய்தல் இலக்காகும்.


விலாசம்
විලාසම



# முகவரியொன்று கிடைப்பது பிரஜையொருவரின் அடிப்படை உரிமையாகும்

**கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்





மத்திய மாகாணத்தில் மொகா தோட்டத்தை மையப்படுத்தி அண்ணளவாக 1000 முகவரிகள் வழங்கக் கிடைத்தமையை எண்ணி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது மகிழ்ச்சியடைவதுடன் பெருமை கொள்கின்றது. மத்திய மாகாணத்தில் முதல் முறையாகவே இம் முகவரி வழங்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது. இதன் முதற்கட்டம் ஊவா மாகாணத்தில் பஸ்ஸரை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 4500 குடும்பங்களுக்கு முகவரி வழங்கும் செயற்பாடு இடம்பெற்றது. இதன் முன்னோடியாகவே செயற்பாடு அமைந்திருந்தது.

தனியொரு மனிதனுக்கு முகவரி இன்மை எனும் நிலை எமது நாட்டின் மனித உரிமைக்கான சந்தர்ப்பம் எந்த அளவிற்கு பாதுகாக்கப்படுகின்றதென புரிந்து கொள்ள முடிகின்றது. இது தொடர்பாக அரசாங்கம் தலையிட வேண்டும். மேலும், இந்த நிலையை மாற்றி அமைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதேபோல சிவில் சமூகமும் இவ்வாறான நிலையை மாற்றி அமைக்க தலையிட வேண்டும்.

அவிஷாய் மார்கெட் எனும் தத்துவஞானி இவ்வாறு குறிப்பிடுகின்றார் அதாவது, “உயரிய சமூகமொன்றில் மக்களை அவமதிக்கும் நிறுவனங்கள் இருப்பதில்லை, இவை மக்களின் உரிமைகளாகும்” என்றார்.





# அடையாளத்திற்கு மதிப்பளித்தல்

**லயனல் குருகே**
சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் முதல்வர்



தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பைச் செய்து தேயிலைத் தொழிலுக்கு உயிர் கொடுக்கும் விசேட சமூகத்தைச் சார்ந்தவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். அவர்கள் மக்களால் போற்றப்பட வேண்டியவர்கள். ஆனால் பிரித்தானிய காலனித்துவ வாதிகளால் பெருந்தோட்டத் துறைக்கு அவசியமான உழைப்பாளர் படையை உருவாக்கும் நோக்குடன் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு இவர்கள் வரவழைக்கப்பட்டது முதல் இன்றுவரை அவர்களுடைய வாழ்க்கை மிக மிகக் கஷ்டமானதாகும். இந்நிலையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும் உள்நாட்டு ஆட்சியாளர்களும் வழிவகுக்கவில்லை. எனவே அவர்கள் இன்றும் சுகாதார வசதியற்ற மிகவும் மோசமான சுற்றாடலில் லயன் காம்பறாக்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இக்குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வி வசதிகள் மிக மட்டுப்படுத்தப்பட்டவை. அவர்கள் வைத்திய சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு செல்வதாக இருந்தாலும் அது மிகவும் கஷ்டமான பயணமாகும். இத்தொழிலாளர்களுக்கு தினசரி சம்பளமே வழங்கப்படும். நாளாந்த சம்பளம் பெரும் இத் தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி நன்மைகள் கூட கிடைப்பதில்லை. தோட்டங்களின் வருமானம் குறைந்துள்ளதாகக் கூறி இவ்வாறு தோட்டத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். எனினும் அவர்களுடைய சம்பளத்தில் இருந்து தவணைக் கட்டணங்கள் அறவிக்கப்படுகின்றன.




இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் கிடைக்கும் தபால் சேவை தோட்டத் தொழிலாளர்களுக்கு மிக மந்த கதியிலேயே கிடைக்கின்றது. அல்லது கிடைப்பதே இல்லை. எனவே அரச பரீட்சைகள், நேர்காணல்கள் ஆகிய மிக முக்கியமான சந்தர்ப்பங்களில் கூட அவர்கள் அவற்றை இழக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட திகதியின் பின்னர் தாமதமடைந்தே உரிய கடிதங்கள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. இது மிகவும் கவலைக்கிடமான ஒரு நிலமையாகும். சம உரிமை கொண்ட பிரஜைகள் என்ற வகையில் அவர்களுக்கான அங்கீகாரம் அரசியலமைப்பிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

30 ஆண்டுகால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பரிந்துரைகளின் 9.200 பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தோட்டப் பிரதேசங்களில் கல்வி, சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கைப் பிரச்சினைகள் என்பன பற்றி அவர்கள் ஆணைக்குழு முன்னே கருத்துத் தெரிவித்தனர். வசதிகளையும் இதனை விட சிறந்த வாழ்க்கை நிலைமைகளையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்தது. ஆகவே இவ் வசதிகளை வழங்குவது தேசிய கடமையாகும். அவர்களின் அடையாளத்திற்கு மதிப்பளிப்போம்.





## வழிமுறை

தோட்ட தொழிலாளர்களுக்கு முகவரியொன்றை தயாரித்து அவர்களின் மதிப்பை மேலோங்கச் செய்யவேண்டும் என்ற முன்மொழிவை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முன்வைத்தது. இக் கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் போது மொகா தோட்டத்தில் கள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. வீட்டு உரிமையாளர்களை கண்டு கலந்துரையாடி அவர்களுடைய கருத்தாலோசனைகளையும், அபிலாஷை களையும் புரிந்து கொள்ளும் முயற்சி பயனுடையதாயிற்று. இவ் ஆய்வு பிரச்சினைகளை அடையாளம் காணவும் உதவியது.

இச்செயற்பாட்டை முன்னுரிமைப்படுத்தி பிரஜைகள் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் பிரஜைகள் சபைகள் ஊடாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல் மற்றும் முகவரி வழங்கும் செயற்பாட்டிற்கான தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு உதவியாக அமைந்தது.

லயன் குடியிருப்பு வீடுகளைஅடையாளம் காண்பதற்காக இதுவரை பயன்படுத்தப்பட்டஒரு சிலவழிமுறைகள் அவர்களை மேலும் ஓரங்கட்டுவதற்கு ஏதுவாக அமைந்தது. இது கல்வி பயிலும் பிள்ளைகளின் பின்னடைவிற்கும் அவர்களது சுய மரியாதைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. சரியான வீதிப் பெயர்கள் இன்மை பிரச்சினையாக அதுவரை பயன்படுத்தப்பட்ட பெட்டல் லயம், ஸ்டோர் லயம், கோயில் லயம், நொ 12 லயம் போன்றதற்கு பதிலாக முறையாக மதுரா புரம், கம்பன் புரம், சிவனொலிபுரம் மற்றும் கண்யாபுரம் போன்ற பெயர்களுக்கு பதிலாக புதிய பெயர்கள் முன்மொழியப்பட்டது. சில தகுதியான பெயர்கள் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. நடைமுறைக்குட்பட்டது.

பகவதி பாதை, குற்றாலம் வீதி, பெக்டரி பாதை, வைத்தியசாலை வீதி, பன்சல வீதி, சன்கமன் வீதி, பாடசாலை வீதி, கிருஸ்ணா வீதி என பழைய பெயர்களை பெயரிடும் அதேசமயம் வசந்தம்புரம், கன்னியாபுரம், எல்லிபுரம், காந்திபுரம், லக்ஷ்மிபுரம் பொன்னொலிபுரம்,கிருஸ்ணா புரம், பராசக்தி புரம், கலைவாணிபுரம், அன்னைபுரம், சாந்திபுரம், பாரதிபுரம் என பெயரிட்டது.





# முகவரியொன்றை பெற்றுக்கொள்ளுதல் அவர்களது உரிமை

**ஈ.ஆர். புலத்சிங்ஹல**
தோட்ட முகாமையாளர்
மொகா தோட்டம் மஸ்கெலியா





நான் கடந்த 2014 செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி இத்தோட்டத்தில் பொறுப்பேற்று கடமையாற்றுகின்றேன். ஏனைய சமூகத்துடன் ஒப்பிடும்போது தோட்ட மக்கள் தமது சுயகௌரவத்தை இழந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. குறைந்தபட்சம் அவர்களுக்கான முகவரிகள் கிடைக்கப் பெறவில்லை. தோட்ட பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். ஒரு சிலர் கொழும்பில் வேலைக்கும் செல்கின்றனர். அச்சந்தர்ப்பத்தில் அவர்களிடம் முகவரி பற்றி யாராவது விசாரித்தால் குறிப்பிடத்தக்க முகவரி ஒன்று இல்லை. அச்சந்தர்ப்பத்தில் பாரிய அசௌகரியங்களுக்கு அவர்கள் முகம் கொடுக்கின்றனர். அவர்கள் தெரிவிப்பது அந்த தோட்டத்தில், மேல் லயத்தில், கீழ் லயத்தில் போன்றவாறு குறிப்பிடுவர். இது தொடர்பாக நான் ஆழமாக சிந்திக்கின்றேன். இது பற்றி சிந்தித்து கொண்டிருந்த காலப் பகுதியிலே வேல்ட் விஷன் நிறுவனத்தின் திரு.நெயெலை சந்திக்கக் கிடைத்தது. அவரே எனக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் உத்தியோகத்தர்களை அறிமுகப்படுத்தினார். அதன் அடிப்படையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் திரு. பிரதீபன் என்பவரே எம்முடன் செயற்பட்டு வந்தார். அவர் எம்முடன் இணைந்து இது குறித்து பொது மக்களை தெளிவுட்டட்டபாடுபட்டிருந்தார். முதலாவதாக ஏன் இவ்வாறானதோர் செயற்பாட்டை





நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பது தொடர்பாக பொது மக்களை அறிவூட்ட வேண்டியிருந்தது. இதன் போது பாரிய பிரச்சினை மற்றும் எதிர்ப்புக்கள் ஏற்பட்டது. இருந்தும் திரு. பிரதீபன் அவர்களின் ஒத்துழைப்புடன் அவற்றை நிவர்த்தி செய்யக் கூடியதாயிருந்தது. மார்ச் 5 ஆம் திகதி நான் கடமை புரியும் தோட்டம் மற்றும் எடம்ஸ் ஸ்பீக் போன்ற பிரிவுகளில் அனைத்து வீடுகளுக்கும் இலக்கம் வழங்கி வர்த்தமானியிட்டு தபால் நிலையத்திற்கு அறிவித்து முகவரி வழங்கும் செயற்பாடு இடம்பெற்றது.



விஷேடமாக எனக்கு இம்மக்களின் கௌரவத்தை பெற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. கடிதங்கள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாமையால் இம்மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். தங்க நகைகளை அடகு வைத்து மீள்திரும்ப வேண்டிய அறிவிப்பு கடிதம் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாமையால் தங்க நகைகள் அருதி (மீட்ட முடியாத நகை) ஆவதும் உண்டு. எனவே, இம்மக்களுக்கு முகவரி பெற்றுக் கொள்ளும் உரிமையுண்டு. ஆகையால், இம்முகவரி வழங்கும் செயற்பாடு மிகவும் பயனுடையதென நான் கருதுகின்றேன். தோட்ட மக்களையும் ஏனைய மக்களைப் போல சமூகமயப்படுத்தி சம அந்தஸ்தை ஏற்படுத்தலே இதன் பிரதான நோக்கமாகும்.





# எனக்கு மிகவும் இலகுவானதாகும்

**ஜே. சில்வெஸ்டர்**
பிரதேசத்தின் தபால் உத்தியோகத்தர்



நான் கடந்த 8 வருடங்களாக இப்பிரதேசத்தில் சேவை செய்கின்றேன். இம்முகவரி வழங்கும் செயற்பாடு மிக முக்கியமானதாக நான் கருதுகிறேன். நான் இப்பிரதேசத்தில் சேவை புரியும் போது பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கநேரிடுகிறது. எல்லோருக்கும் மொகா தோட்டம் மஸ்கெலியா என்றே கடிதங்கள் வருகின்றது. ஒரே பெயரில் பலர் இருப்பதால் கடிதங்களை கொடுப்பது கடினமானது. இத்தோட்டத்தில் ஆறுமுகம் எனும் பெயரில் அறுவர் உள்ளனர். அதில் நான்கு பெயர் எ. ஆறுமுகம் இவ்வாறு இருப்பதால் பல பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. இலக்கத்துடனான முகவரி ஒன்று கிடைக்குமானால் எனக்கு மிகவும் இலகுவாக அமையும். ரிட்டன் ஆகும் கடிதங்களை மீணடும் வழங்குவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும். ஆரம்பத்தில் மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டை கிராம உத்தியோகத்தர் மூலமே கிடைக்கப் பெற்றது. தற்போது நான் அவற்றை பகிர்கிறேன்.குறிப்பிட்ட பாடசாலை சென்று வழங்க முடிவதில்லை. அவர் பாடசாலையில் இருந்து இடைவிலகியுள்ளார். இதன் காரணமாக தோட்டத்தில் பல இடங்களுக்கு அலைந்து திரிய வேண்டியிருக்கும். கடிதத்தை திறந்து குறிப்பிட்ட நபரின் முகத்தை பார்த்து கடிதத்தை வழங்குவதற்கான எமக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை.

மேலும் அபிவிருத்தி செயற்பாடுகள்குறித்து பல நிறுவனங்களில் இருந்து கடிதங்கள் வருவதுண்டு. அவற்றை உரிய முறையில் பகிர்ந்தளிக்க முடிவதில்லை. இதன் காரணமாக குறிப்பிட்ட செயற்பாடுகள் தாமதம் அடைகின்றது. ஒருசில நிறுவனங்கள் கடன் வழங்குகின்றனர். இருந்தும் குறிப்பிட்ட கடிதங்கள் உரிய நேரத்தில் வழங்க முடிவதில்லை. இதனால் எனக்கும் மக்களுக்கும் பல அசௌகரியங்கள் ஏற்படுவதுண்டு. “இப்படியும் துன்பப்பட்டு வேலை செய்ய வேண்டுமா” எனவும் யோசிப்பதுண்டு.

இவ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படுத்தும் செயற்பாடு வெற்றியடையுமாயின் பாராட்டப்பட வேண்டியது. அத்துடன் இத்தோட்டத்தில் சேவை புரியும் பயனுடையதாக அமைகின்றது. இச்செயற்பாட்டுக்கு எல்லா உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இத்தோட்டத்திற்கு தபால் சேவை புரிபவர் என்ற அடிப்படையில் நான் பெறும் மகிழ்ச்சி அடைகின்றேன்.



# முகவரியே அடையாளத்தை உறுதிப்படுத்துகின்றது

**மங்கப்பன் ராஜேந்திரன்**
பிரதி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி
மஸ்கெலியா



மஸ்கெலியா, சிவனொலிபாத மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள அழகிய பிரதேசமாகும். இங்கு 8 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன. மஸ்கெலியாவில் இருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் மொகா கிராம உத்தியோகத்தர் பிரிவு அமைந்துள்ளது. மொகா தோட்டமானது வீதி அபிவிருத்தி கூட சரியான முறையில் அமையாத, பிரச்சினைகள் பல உள்ள கஸ்ட பிரதேசமாகும். பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்பிரதேசத்தை தேர்ந்தெடுத்து இம்மக்களின் இயல்பு வாழ்க்கையை மேலோங்கச் செய்ய செயற்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் ஒரு நிறுவனம் மக்களது முகவரி அற்றப் பிரச்சினையை இனங்கண்டு பொது மக்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. மொகா பிரதேசத்திற்கு மாத்திரம் அல்ல, எல்லா தோட்டங்களுக்கும் முகவரி வழங்குவது மிக அவசியமானதாகும். தனி நபர் ஒருவரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவது முகவரியாகும். முகவரி ஒருவருக்கு கிடைப்பதால் தன் வாழ்க்கை முறையை மாற்றி அமைப்பதற்கு உறுதுணையாக அமைகின்றது.

அதன் அடிப்படையில் மொகா பிரதேசத்தை இச்செயற்பாட்டில் தேர்ந்தெடுத்தல் மிக முக்கியமானதாகும். முகவரி அற்ற தோட்ட மக்கள் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. தோட்ட வீதிகளுக்குப் பெயர் இட்டு லயன் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்க முகவரி வழங்குதல் மிக மகிழ்ச்சிக்குரியதோர் விடயமாகும்.

ஒரு பிரச்சனையின்போது இப்பிரதேசத்தில் ஒருவரை அடையாளப்படுத்திக் கொள்ள விரையும் சந்தர்ப்பங்களில் பொலிஸ் உத்தியோகத்தர் பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. அழைப்பாணை வழங்குவதற்கு முகவரியொன்று இருப்பது முக்கியமானதாகும். இல்லையெனில், பொலிஸாரும் பொதுமக்களுக்கும் பல சிரமங்கள் ஏற்படுவதுண்டு. அதேபோல, ஏனைய பிரதேசங்களில் இருந்து கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளுக்கு மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. சமீபத்தில் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இத்தோட்டத்தில் உள்ள ஒரு நபரின் மகளை கொழும்பில் கைது செய்துள்ளனர். இது குறித்து கொழும்பில் இருந்து எமக்கு உரிய தகவலை குறிப்பிட்ட வீட்டாருக்கு தெரியப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டது. முகவரி இன்மையால் எந்த வீடென எம்மால் சரியாக அடையாளம் காண முடியாமல் போனது. இதனால், உரிய நேரத்தில் தகவலை வழங்காதவிடத்து குறிப்பிட்ட நபரை பிணையில் எடுக்க முடியாது போகின்றது. அவர் பதினான்கு நாட்களுக்கு கைது செய்யப்படுவார். முகவரி இன்மையே இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகின்றது.

அதேபோல, மாணவர்களுக்கு கிடைக்கும் புலமைப்பரிசில்களும் கூட முகவரி இன்மையால் மீண்டும் திருப்பி அனுப்பப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலர் சரியான முகவரியை குறிப்பிமாறு கூறுவதுண்டு. சரியான முகவரி எவருக்கும் கிடையாது. இருந்தாலும் எல்லா வீடுகளுக்கும் முகவரி ஒன்றை வழங்குதல் உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.





# முகவரி வழங்குவதற்கு பெருந்தோட்ட அரசியல்வாதிகள் முன்னிலை கொள்ள வேண்டும்


**வீ. என்ரனீ பிரணாந்து**
மொகா தோட்ட தமிழ் வித்தியாலயம்




மொகா தோட்ட தமிழ் வித்தியாலயத்தின் அதிபராகவும் மொகா தோட்ட சிவில் பாதுகாப்பு குழுவின் தலைவராகவும் நான் செயற்படுகின்றேன். பெருந்தோட்டத் துறையில் மொகா தோட்ட மக்களுக்கு முகவரி கிடைக்கப் பெறுகின்றமையை எண்ணி நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தில் மொகா கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் காட்மோர் பிரிவு மிகவும் கஸ்ட பிரதேசங்களாகும். இப்பிரதேசங்களின் விருத்திக்காக பல சிவில் அமைப்புக்கள் முன்னின்று செயற்படுதல் மகிழ்ச்சிக்குரியதாகும். விசேடமாக வேல்ட் விஷன் போன்ற அமைப்புக்கள் இப்பிரதேசத்திற்கு வழங்கிய ஒத்துழைப்புக்கள் பாராட்டப்பட வேண்டியவையாகும். மொகா மேல் பிரிவு, மொகா கீழ் பிரிவு, எடம்வீக் பிரிவு மற்றும் மிக்லொட் போன்ற பிரதேச மக்களின் வாழ்க்கை மேலோங்க மொகா தோட்ட முகாமைத்துவம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் மிகவும் பெறுமதியானவையாகும். இத் தோட்ட பிரதேசங்களில் சுமார் 5000 மக்கள் வாழ்கின்றனர். 700 மாணவர்கள் உள்ளனர். இப்பிரதேசத்தை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. வைத்தியசாலை, தபால் நிலையம், கூட்டுறவு சங்கம், வங்கி கட்டமைப்புக்கள் போன்ற பிரச்சினை உள்ளது. மக்கள் தங்களது தேவைகளுக்கு 30 கிலோமீற்றர் தூரம் கடந்து ஹட்டன் நகரத்திற்கு செல்கின்றனர். இப் பிரயாணங்களுக்காக அதிகமான பணம் செலவாகின்றது. குறிப்பிட்ட சலுகைகள் இப்பிரதேசத்திலே காணப்படுமாயின் வீண்விரயமாகும் இப்பணத்தை மக்களின் வாழ்க்கை அபிவிருத்திக்காக பயன்படுத்த முடியும்.ஒவ்வொரு வீட்டுக்கும் முகவரியொன்று இருப்பது வாழ்க்கையின் அபிவிருத்திக்கு முக்கியமாகஅமைகின்றது. மொகா தோட்ட நிர்வாகம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து மார்ச் 05ஆம் தினம் முகவரி வழங்கல் செயற்பாட்டை மக்கள் மயப்படுத்தப்பட உள்ளனர்.

இது மொகா தோட்ட மக்களுக்கு மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். இம்முகவரி வழங்குதல் ஊடாக பெருந்தோட்ட மக்களின் அடையாளத்தை தேசிய, சர்வதேச அளவில் கொண்டு செல்லும் இது வரவேற்கத்தக்கதும் கூட. முகவரி கிடைக்கப் பெறுவதால் தோட்ட மக்களுக்கு நகர்ப் புரங்களுக்கு ஒத்த சமமான சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுவதுடன் பிரதேச சபையின் சேவையை பெற்றுக் கொள்வதற்கும் ஏதுவாக அமைகின்றது. மொகா தோட்ட முகாமையாளர் திரு. புலத்சிங்கள அவர்களின்அர்ப்பணிப்பு பாராட்டப்பட வேண்டியது. அவர் எப்போதும் தோட்ட மக்களின் வாழ்க்கை

# விலாசம் විලාසම



# எட்டாத கனவு

**பீ. ரங்கராஜ்**
தலைவர் எடம்ஸ்பீக் பிரஜைகள் சபை



அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கின்றார்.மேலும் அவர் கூறுகையில் தோட்ட மக்களுக்கு நல்லதோர் காலம் உருவாவது இம்மக்களின் வாழ்க்கை அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளதென தொடர்ச்சியாக தெரிவித்தார்.

அதேபோல மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கள உத்தியோகத்தரான திரு. பிரதீபன் தோட்ட முகாமையாளருடன் இணைந்து 3 மாதங்களாக இச்செயற்பாட்டிற்காக தன்னை அர்ப்பணித்துள்ளார். நான் 21 வருடம் இப்பிரதேசத்தில் சேவை செய்யும் அதிபர் என்ற அடிப்படையில் இத்தோட்ட மக்களின் வாழ்க்கை விருத்தி பற்றி சிந்திப்பதுண்டு. அதன் அடிப்படையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்மற்றும் வேல்ட் விஷன் போன்ற அமைப்புக்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இவ்வாறான அமைப்புக்கள் ஏனைய பெருந்தோட்டங்களுக்கும் முகவரியை வழங்கி செயற்பட வேண்டும். எனவே பெருந்தோட்ட அரசியல்வாதிகள் துரிதமாக இச்செயற்பாட்டில் முன்னிலை கொள்ள வேண்டும் என்பது எனது வேண்டுகோள். (வி. அன்டினி பிரனாந்து, மொகா தோட்ட தமிழ் வித்தியாலயம்)

நான் அறிந்த காலம் தொடக்கம் இந்தத் தோட்டத்தில் நேரடியாக கடிதமொன்று கிடைக்கப் பெறவில்லை. அதன் அடிப்படையில் மொகா தோட்ட நிருவாகம் பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் முகவரி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அது மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டப்பட வேண்டியதும் கூட. முகவரி என்பது தோட்ட மக்களாகிய எங்களுக்கு கிடைக்கப் பெறாத கனவாகும். இதன் காரணமாக மொகா தோட்ட மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைகின்றனர். இதன் பின் எமது எதிர்கால சந்ததியினருக்கு கடிதங்கள் கிடைக்கும். பல பிரச்சினைகள் தீர்க்கப்படும். வீடுகளுக்குப் புதிய இலக்கங்கள் தரப்பட்டுள்ளன. தமக்கென முகவரி உண்டு. இச் செயற்பாட்டிற்கு தலையிட்ட நிறுவனங்கள், தோட்ட முகாமைத்துவம் மற்றும் பிரஜைகள் சபைகளுக்கு எமது நன்றிகள்.






# பொது மக்களின் வாழ்க்கைக்கு முக்கிய சந்தர்ப்பமாகும்

**ஆர்.எம்.சீ.சி. குமாரி**
மொகா தோட்ட கிராம உத்தியோகத்தர்






மொகா கிராம உத்தியோகத்தர் பிரிவு என்பது மிகவும் கஸ்டமான கிராம உத்தியோகத்தர் பிரிவாகும். இம் முகவரி வழங்குதல் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் இச் செயற்பாடானது வெற்றிகரமான மிகவும் அவசியமான செயற்பாடொன்றாகும். காரணம் ஒரே பெயர் உடைய பலர் மொகா தோட்டத்தில் உள்ளனர். மொகா தோட்டத்தில் அதிகமான லயன் குடியிருப்புக்களே உள்ளது. ஒரு லயன் குடியிருப்பில் ஒரே பெயருடைய பலர் உள்ளனர். இலக்கத்துடனான முகவரியை வழங்குதல் முக்கியமானதும் காலத்தின் தேவையும் கூட.

தற்போதய நிலையில் தோட்டத்தில் வழங்கும் போது மொகா தோட்டம் எனும் முகவரியே குறிப்பிடப்படுகின்றது. ஒரே பெயரில் பலர் இருப்பதால் பிரச்சினைக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நேர்முக பரீட்சைக்கான கடிதம் ஒன்று வந்தாலும் கூட அதை உரிய நபருக்கு வழங்க முடியாமல் போகின்றது. கட்டாய தேவைகளுக்கான பல சந்தர்ப்பங்களில் முகவரி இல்லா பிரச்சினையால் மக்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. மொகா தோட்டம் அமைந்துள்ள புவியியல் அமைப்பும், நகரத்திற்குமான தொலைவும் காரணமாகவும் முகவரியொன்றை வழங்குதல் பொது மக்களின் வாழ்க்கை மேலும் பயனுடையதாக இருக்கும்.இக் காரணத்தினாலேயே முகவரி வழங்கும் செயற்பாடானது சிறந்ததோர் செயற்பாடென கருதுகிறேன்.



# எமக்கும் உரிமையுண்டு

எஸ். நிதர்ஷன்
மாணவன்

எமது தோட்டம் கிராமங்களாக மாற்றம் பெற்றதால் நாங்களும் இந்த நாட்டின் உரிமையுள்ள பிரஜைகளாக மாறியுள்ளோம். நாட்டின் பொருளாதாரத்திற்கு அளப்பரிய சேவையைச் செய்வது எமது பெற்றோர்... எமக்கும் முகவரி கிடைத்தது மகிழ்ச்சிக்குரியது.



# இனி தவறாகாது

பெருமாள் மகேந்திரன்
தலைவர்
பிரஜைகள் சபை

பிரஜைகள் சபையின் ஊடாக முகவரி வழங்கும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர். 200 வருடங்களாக எமக்கு முகவரியொன்று இருக்கவில்லை. இன்று நாம் தோட்டத்தில் பிரஜைகள் சபையை ஸ்தாபித்து இச் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளோம். அதற்கான ஒத்துழைப்பை தோட்ட முகாமையாளர் பெற்றுத் தந்துள்ளார். ஒரு முறை மின்சாரம் வழங்குவதற்கு எமது தோட்டத்திற்குச் மின் கம்பங்கள் வந்தது. எமது தோட்டம் என எண்ணி "மொரா" தோட்டத்திற்கு சென்றிருந்தனர். பின்னர் நாம் வேண்டுகோள் முன்வைத்து மீண்டும் அவற்றை பெற்றுக்கொண்டோம். தற்போது அவ்வாறான தவறுகள் இடம்பெறப் போவதில்லை. தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் போதும் முகவரி புதியதோர் பிரச்சினையாக அமைகிறது. தோட்ட முகாமையாளர் அலுவலர்கள், பிரஜைகள் சபை அங்கத்தவர்கள் போன்றோரை இத்தருணம் நினைவு கூற வேண்டியுள்ளது.

# விதியையும் மாற்றுவோம்

விலாசம் இல்லாத
விருந்தாளிகளாய்
இறக்குமதியானோம்
இந்தியாவிலிருந்து.

ரத்தம் சிந்தி
உடல் வருத்தி
உழைத்து கிடந்தோம்
உரிமையில்லாமல்.

இனி
உரக்கச் சொல்வோம்
உலகிற்கு
உரித்துடைய இல்லத்துக்கு
நாங்களும்
உடமையானோமென்று.

மாற்றம் பெரும்
புவியில்
நாங்கள் மட்டும் சலைத்தவர்கள

இப்போது
விலாசம் பெற்றோம்
இன்னும் கொஞ்ச நாளில்
எங்கள்
விதியையும் மாற்றுவோம்
வா....
மலைத் தமிழா !
பிறரை
வாழ்வித்தது போதும்
நாமும்
வாழ
வழி செய்வோம்





**கோபால் பிரேம்குமார்...**

# பாரிய சேவை

**ஆறுமுகம் சரவணபவன்**

செயலாளர் – அம்பகமுவ பிரதேச சபை

அம்பகமுவ பிரதேச சபையின் செயலாளர் என்ற அடிப்படையில் கடந்த 8 வருடங்களாக கடமையாற்றி வருகின்றேன். இலங்கையில் விசாலமான பிரதேச சபைகளில் அம்பகமுவ இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இங்கு 88 வீதம் தமிழ் பேசும் மக்களும் 12 வீதமானோர் ஏனைய சமூகத்தினரும் ஆவர்.



பல்வேறு அமைச்சுக்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளின் போது தோட்ட மக்களுடன் கலந்துரையாடியே அச்செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. புல்வேறு தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல்வாதிகளின் பிரதிநிதிகள் ஊடாக தகவல்களை அனுப்பியே மக்களை ஒன்றுதிரட்ட வேண்டியள்ளது. பல வருடங்களாக தோட்ட மக்களுக்கு முகவரி இன்மை பாரிய பிரச்சினையாக விளங்குகின்றது. பிரதேச சபை என்ற அடிப்படையில் அப்பிரச்சினைக்கு நாங்களும் முகம் கொடுக்கின்றோம். தோட்ட மக்களுக்கு பிரதேச சபையின் எந்தவொரு தகவலையும் உரிய நேரத்தில் அறிவிக்க முடியாது போகின்றது. சட்ட ரீதியான ஆவணங்களை வழங்கும் போது பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தொலைபேசியின் தகவல்களை பரிமாற்றிக் கொள்ள முடிந்தாலும் கூட உத்தியோகபூர்வமான கடிதங்கள் தபால் மூலம் அனுப்ப வேண்டியுள்ளது. அந்த அடிப்படையில் தோட்ட குடியிருப்புகளுக்கு முகவரியை வழங்குதல் மிகவும் பயனுடையதாகும். தோட்ட புரங்களுக்கு ஒவ்வொரு பிரிவுக்குமான இலக்கங்களும் முகவரியும் வழங்குதல் முக்கியமானதோர் விடயமாகும்.

கடந்த காலங்களில் இது தொடர்பாக அரசியல் தரப்புகளும் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது. எனினும், மாற்றுக் கொள்கைளுக்கான நிலையத்தின் தலையீட்டில் இச்செயற்பாட்டை நடைமுறைப்படுத்தியமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

# எமது தோட்டமும் கிராமமானது

**ப. லக்ஷனா**

மாணவி



நான் சென் ஜோசப் வித்தியாலயத்தின் உயர்தரம் கற்கின்றேன். நாம் பிற பாடசாலைகளுக்குச் சென்றால் அவர்களுக்கு தமக்கென முகவரியொன்று உள்ளது. நாங்கள் மொகா தோட்டம் என்றே குறிப்பிடுவோம். இன்று அந்நிலை மாறிவிட்டது. பிரஜைகள் சபை தோட்ட முகாமைத்துவம் இணைந்து எல்லா வீடுகளுக்கும் முகவரி வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இப்போது எமது தோட்டமும் கிராமமானது. எங்கள் தோட்டத்தில் எல்லா லயின் குடியிருப்புகளுக்கும் சிறப்பான பெயருண்டு. முன்னர் யாருக்கும் கடிதம் வருவதில்லை. தோட்ட முகாமையாளர் காரியாலயத்திற்கே கடிதம் கிடைக்கப்பெறும். முன்னைய நிலை இன்று மாறிவிட்டது, எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது.



# மிகவும் மகிழ்ச்சி

**பீ. காயத்திரி**

மாணவி

எடம் பீக் பிரிவில் நான் வாழ்ந்து வருகிறேன். காட்மோர் வித்தியாலயத்தில் கல்வி பயில்கிறேன். எமது தோட்டத்திற்கு மிக நீண்ட வரலாறு உண்டு. வரலாற்றில் எமது தோட்டத்தை நிர்வகித்தவர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள். பல வருடங்களாக முகவரியொன்று காணப்படவில்லை. இன்று எமக்கு முகவரி உண்டு. தோட்டம் கிராமமாயிற்று, மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது.